தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உரு	திருவள்ளுவர் யாண்டு ககஅ௰ கார்த்திகை 1949—நவம்பர்	மலர் அ

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

சென்னை மாகாண ஆட்சியாளர் வருகை

நம் அழைப்புக் கிணங்கி, சென்னை மாகாண ஆட்சியாளர் மாட்சிமிக்க பவநகர் அரசரும் அரசியாரும், 1949, திசம்பர், 3உ சனிக்கிழமை முற்பகல், நம் சங்கத்திற்கு எழுந்தருளிச் சங்கச் சிறப்புக்களைக் கண்டு மகிழ ஒப்பியுள்ளார்கள்.

அதுபோது, இயல், இசை, நாடகத் துறைகளில் தமிழர்கள் பழங்காலம் தொட்டு எத்துணை மேம்பாடுற்று வந்திருக்கின்றனர் என்பதைச் சொல்லாலும் எடுத்துக் காட்டுக்களாலும் விளக்கிக் காட்ட நம் சங்கம் கருதியுள்ளது. மேலும், தமிழர் நாகரிகப் பொருட்காட்சியும் நடத்த எண்ணியுள்ளது.

இந்நன்னாளில் வந்து சங்க உறுப்பினரும், ஏனைய அன்பர்களும் தத்தமக்குரிய பங்கெடுத்துக் கொண்டு நிகழ்ச்சிகளைச் சிறப்புறச் செய்ய வேண்டுமெனச் சங்கம் மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றது.

மாட்சிமிக்க விருந்தினர் வரும்போது உடனிருந்து மகிழ விரும்பும் அன்பர்கள் சங்க அமைச்சருக்கெழுதி நவம்பர் 31 ஆம் நாளைக்குள் நுழைவுச் சீட்டு பெற்றுக் கொள்ள வேண்டப்பெறுகிறார்கள்.

தமிழக எல்லை மாநாடு.

1949, நவம்பர், 5 ஆம் நாள் சனிக்கிழமை ஒரு நல்ல பொன்னாள். பிறப்பு வேறுபாடின்றி, கட்சி வேறுபாடின்றி, கருத்து வேறுபாடின்றித் தமிழ் மக்கள் யாவரும் தமிழன்னைக்கு நேர்ந்த இடையூறு போக்கி மேம்பாடு கருதிச் சென்னையில் முழக்கம் செய்தனர்.

தமிழக எல்லை மாநாடு தனிப்பெருஞ் சிறப்புடன் கூடிற்று. கடலெனப் பெருங் கூட்டம் குழுமிற்று. உணர்ச்சி பெருகத் தமிழரெல்லாரும் சேர்ந்தனர், தண்டமிழ்த் தாயின் தொண்டர்கள் ஆயினர். அன்னைக்கு நேர்ந்த அல்லலை உணர்ந்தனர்.

வடக்கே திருப்பதிக்கும் தென்குமரிக்கும் அப்பாலும் தமிழக எல்லை வளம்பெற வேண்டுமெனப் பேரறிஞர் பலரும் ஆரவாரித்தனர். 'சென்னை தமிழருடையதே' என முழக்கினர்.

இசைஞர்கள் திருவாளர்கள் இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள், நடிகமணி டி. கே. சண்முகம் அவர்கள், நகைச்சுவை அரசு என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் பாட்டிசைத்தனர்.

இத்தகைய உணர்ச்சி நிலையில் பேரறிஞர் வீரத்திரு. R. K. சண்முகஞ் செட்டியார் அவர்கள் தலைவராக அமர்ந்து கருதும்பொருளை விளக்கித் தமிழர் கடமையை எடுத்துக் காட்டினர்.

செட்டி நாட்டரசர் பேரறிஞர் வீரத்திரு. மு. அ. முத்தையாச் செட்டியார் அவர்கள், திருவாளர்கள் தமிழ்ப் பெரியார் வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள், வரவேற்புத் தலைவர் வ. சோ. தியாகராச முதலியா ரவர்கள், தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள், அமைச்சர் எம். பக்தவத்சலம் அவர்கள், சென்னைநகர் முதற்பெருமகனார் எஸ். இராமசாமி நாயடு அவர்கள், சுதேசமித்திரன் ஆசிரியர் சி. ஆர். சீநிவாசன் அவர்கள், கோயமுத்தூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்கள், அப்துல் மஜீத் அவர்கள், பேரறிஞர் மு. வரதராசனார் அவர்கள், நீலாவதி இராமசுப்பிரமணியம் அவர்கள், சென்னைநகர்த் தெலுங்கர் சார்பில் கே. வேங்கடசாமி நாயடு அவர்கள், ம. பொ. சிவஞான கிராமணியார் அவர்கள், தென்திருவாங்கூர்த் தமிழர் சார்பில் நேசமணி அவர்கள், சித்தூர் (Chittoor) மக்கள் சார்பில் மங்கல கிழார் அவர்கள் முத

லான பெருமக்கள் சிறப்பாகப் பங்கெடுத்துக் கொண்டு உணர்ச்சியும் உண்மையும் விளங்கப் பேசினர். கீழ்க் காணும் முடிபுகளை உறுதியுடன் கூறி நிறைவேற்றினர்.

"1. நிர்வாக வசதியை முன்னிட்டும் மொழி வளர்ச்சி கலை வளர்ச்சி முதலிய துறைகளில் அந்தந்த மொழியினர் தங்கள் தங்கள் பண்பாட்டிற்கேற்ப முன்னேற்றம் அடைய வும் பல மொழியினர் உள்ள சென்னை மாகாணத்தை மொழிவாரி மாகாணங்களாகக் கூடியவிரைவில் பிரித்து அமைக்கவேண்டுமென்று இம்மாநாடு காங்கிரஸ் மேலிடத் தாரையும் மத்திய அரசாங்கத்தையும் கோருகின்றது.

"2. ஆந்திர மாகாணம் பிரிக்கப்படவேண்டுமென்று ஆந்திரர்கள் வெகு காலமாக ஆவல் கொண்டிருப்பதனால் தமிழர்களடங்கிய இம்மாநாடு மாறுபட்ட கருத்தில்லாமல் புதிய அரசியல் திட்டம் அமுலுக்கு வருவதற்குள் ஆந்திர மாகாணத்தையும் பிரிவினை செய்யவேண்டுமென்று வற் புறுத்துகிறது. அப்படிப் பிரிக்கப்படும் ஆந்திரமாகாணத் தில் சென்னை நகரம் சேர்க்கப்படக் கூடாது என்று மூவர் கமிட்டி செய்துள்ள முடிவை இம்மாநாடு வரவேற் கின்றது. மொழி, கலாசாரம் முதலிய எல்லாத்துறை களிலும் சென்னை நகரம் தமிழ் நாட்டைச் சேர்ந்ததாக இருப்பதால் எக்காரணத்தைக் கொண்டும் சென்னை நகரைத் தமிழ் நாட்டிலிருந்து பிரிக்கவோ அல்லது தனி மாகாணமாக்கவோ அல்லது மத்திய அரசாங்கத்தின் நிர்வாகப் பகுதியாக அமைக்கவோ தமிழ்மக்கள் எக் காலத்தும் உடன்பட மாட்டார்கள் என்பதை இம்மாநாடு வற்புறுத்துகின்றது.

"3. வடவேங்கடம் முதல் தென்குமரிவரை உள்ள நிலப் பரப்பில் தமிழர்கள் வாழும் பகுதியைத் தமிழ் மாகாண மாக அமைக்கவேண்டும். அப்படி அமைக்கப்படும் தமிழ் நாட்டின் நிரந்தர எல்லையை எல்லைக்கமிட்டி மூலமாக வரையறுக்க வேண்டுமென இம்மாநாடு தீர்மானிக்கிறது."

தெலுங்கர் தம் நாடென வாதிடும் தமிழ் மாவட்டத் தார் தாம் தமிழ் நாட்டுக் குரியவர் என்றும், தம் மாவட் டம் தமிழகத்தில் சேர்க்கப் பெறவேண்டுமென்றும் ஆவல் கொண்டு வற்புறுத்துவது தமிழர் உறுதியையே நிலை நாட்கின்றது.

தமிழ் நாட்டெல்லைப் பொருளில் ஊக்கமும் சார்பு முடைய எல்லாரும் இம் மாநாடு செய்துள்ள முடிபுகளை ஊன்றிக் கருதுவார்களாக.

கலைமகள் விழா—1949.

நம் சங்கக் கலைமகள் விழாவின்போது நடைபெற்ற உமாமகேசுவர நடுத்தரப் பள்ளிச் சிறுமியர் நாட்டியத்தைப் பாராட்டிக் கும்பகோணம் நகராட்சிக் கழக ஆணையாளர் திருவாளர் கீ. இராமலிங்க முதலியார் அவர்கள் எழுதி யனுப்பிய கருத்துக்களை இங்கே தெரிவிக்கின்ளுேம்.

"கலைமகள் விழா முதல் நாளில்(22—9—49) ல் நடந்த **தேவார நடனங்கள்** இன்பம் பயந்தன. தேவாரப் பாடல்களும் நடனத்துக்கு உரியனவாகுமா என்னும் ஐயம் அன்று அறவே நீங்கிற்று. இளஞ் சிறுமியர் நல்ல வண்ணமாக நடித்தனர். பெருந் தொகை பேசிக்கொண்டு நடன அரங்குகளில் நடிக்கும் நடனங்களுக்கு, இது சிறிதும் பிற் பட்டதாகத் தோன்றவில்லை. மெய்ப் பாடுகள் அறிவு கூடியனவாக உணர்ச்சி ஊட்டுவனவாக இருந்தன. பண், உரை, நடிப்பை—உடன் சேர்த்துச் செல்கின்ற பாடல் அவற்ருற் சிதையாமல் உயர்வு பெறும் முறையில் ஓதப் பெற்றதைக் கேட்டு மகிழ்ந்தேன். சொற்கள் இன்னமும் தெளிவாகப் பாடப் பெறலாம்.

இசையாலும் மெய்ப்பாட்டாலும் பாடலின் உருவமே தெரியாதபடி அடித்துப் பொருளே விளங்காத வண்ணம் புரட்டிக் குலைத்து விடுவதே இக் காலத்திய நடனங்களின் இயல்பாகிவிட்டது. முறையாக நடிப்பின் தேவார நடனங்கள் நடனக் கலையின் உண்மை யியல்போடு விளங் கிப் பெரும் பயன் விளைக்கும் என்பது திண்ணம்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம் இயற்றமிழோடு இசை நாடகத் தமிழையும் இங்ஙனம் சிறந்த முறையில் வளர்க்க முற்பட்டிருப்பதைப் பாராட்டிப் போற்றுகின்றேன்."

தஞ்சை மாவட்டத் தண்டற் றலைவர் திரு. T. K. சங்கர வடிவேற் பிள்ளை அவர்கள் இந் நாட்டியத்தில் ஈடுபட்டு மெச்சி நல்விடை நாளில் பின்னரும் நடிக்கச் செய்து பார்த்து மகிழ்ந்த செய்தியைப் பெருமிதத்தோடு இங்குக் குறிப்பிடுகின்ளுேம்.

இசைத் தமிழ்ப் பாடல்.

திருஞானசம்பந்தர் அருளியது.

திருத் தென்குரங்காடுதுறைத் தேவாரம். (ஆடுதுறை).

இசையாளர் சங்கீதம் திரு. ப. சுந்தரேசன், கும்பகோணம்.

பண்: இந்தளம்.

இராகம்: இந்தோளம்.] [தாளம்: சதுரச்ர அடதாளம்.
12 எண்கள்

20-ஆவது
நடபைரவியிற் பிறந்தது.

சதுரச்ர அடதாள
அங்கங்கள்.

ஆ.— ச க ம த நி ச்
அவ.—ச் நி த ம க ச

லகு	லகு	திருதம்	திருதம்	
$|_4$	$|_4$	O	O	=12

பரவக் கெடும் வல்வினை பாரிடஞ் சூழ
இரவிற் புறங் காட்டிடை நின்றெரி யாடி
அரவச் சடை யந்தணன் மேயவ ழகார்
குரவப் பொழில் சூழ்குரங் காடுது றையே.

முதலடி

।₄ லகு	।₄ லகு	○ திருதம்	○ திருதம்
; க ம மா மகமக சநி சா ;	; மா , கமா ; ; க மதநி	ச்ா ; ச் நி தா	நி தமா தமமக ‖
; ப ர வ , , , , க்கெ, டும் ;	; வல் , வினை ; பா , , ,	, ; ரி , டம்	சூ , , ழ , , , ‖
கச கமமா மாமக ச நி சா ;	; மா , க மக மா ; க மதநி	ச்ா ; ச்நிநித	நி ததம தமமக ‖
, , பரவ , , , க்கெ . டும் ;	; வல் , வி , , னை ; பா , , ,	, ; ரி , டம் ,	சூ , , , ழ , , , ‖
கச கமமா மாமக ச நி சா ;	; மா , ம ககமா ; க மதநி	ச்க்ச்ா ச்நிநித	நி ததம தமமக ‖
, , பரவ , , , க்கெ . டும் ;	; வல் , வி . . னை ; பா , , ,	, , , ரி . டம் ,	சூ , , , ழ , , , ‖
கச கமமா மாமக சநி சா ;	; மா . மககம த மமத க ம த நி	ச்க்ச்ா ச்நிநித	நி ததம தமமக ‖
, , பரவ , , , க்கெ . டும் ;	; வல் , வி , , , னை , , , பா , , ,	, , , ரி . டம்,	சூ , , , ழ , , , ‖
கச கமமா மாமக சநி சா ;	; மா ம ககம த மமத க மதநி	ச்க்ம்க்ச்நிநித	நி ததம தமமக ‖
, , பரவ , , , க்கெ . டும் ;	; வல் வி , , , னை , , , பா , , ,	, , , , ரி . டம்,	சூ , , , ழ , , , ‖

கச
, , = பரவக் கெடும்

துணையடி

; நிச்ச்ா ச்ாச்ாச் நிதா ; | ; ம தாநி ச்ா ச்ா ; ச்ா ; | ச்க்ச்நி நி ச்நித | தநிதம தமகச ||
; இரவில்பு றங் கா , , ; | ; ட் டி , டை , நின் று எ , | ரி , , , யா , , , | , , , , டி , , , ||

; நிச்ச்ா ச்ாச்ாச் நிதா ; | ; ம தாநி ச்ா ச்ா ; ச்க்ச்ா | ச்க்ச்ச்நிதநிச் | நிநிதம தமகச ||
; இரவில் பு றங் கா , , ; | ; ட் டி , டை , நின் று ; எ , , | ரி , , , , , யா , | , , , , டி , , , ||

; நிச்ச்ா ச்ாச்ா ச் நிநிதா . | ; ம தாநி ச்ா ச்ா ; நிச்க்ம் | ம்க்க்ச்ச் நி நித | தமமக தமகச ||
; இரவில்பு றங் கா , , , . | ; ட் டி ; டை நின் று எ , , , | ரி , , , , யா , , | , , , , டி , , , ||

கச = பாவக்கெடும் =
, ,

கடையடி

; கமமக மா மகச நி̣ சா ; | ; மா , க ; மககமக மதநி | ச்க்ச்ா ச்நிதா | ச்நிதம நி தமக ||
; அரவ , , ச்ச , டை , , ; | ; அ ந் த ; ண , , ன் மே , , , | , , , ய , , | அ . ழ . கா , , ர் ||

; நிச்ச்ா ச்ாச்ா ச்நிநிதா , | ; மதாநி ச்ா ச்ா ; நிச்க்ம் | ம்க்க்ச் ச் நிநித | தமமக த மகச ||
; குரவப் பொழில் சூ , , ழ் , | ; கு , ரங் கா டு ; து , , , | , , , , றை , , , | , , , , யே , , , ||

கச = பாவக்கெடும்
, ,

குறிப்பு:- இந்தளம் எனும் பண் மிகப் பழைய காலத்தே ஐந்திசை முறைகளில் மூன்றாவது முறையில் தோன்றியது. இந்த முறையே எத்தகைய ஐயந்திரிபிற் கிடமின்றி உணரத் தக்கதாகும், இப்பண் படுமலைப் பாலையிற் பிறந்தது. படுமலைப் பாலை யென்பது இக் காலம் நடபைரவி யாகும். ஆகவே வேங்கடமகி கூறிய ஹிந்தோளமே நமது இந்தளப் பண்ணாகும். பிற்காலத்தில் வடநாட்டுமுறை ஹிந்தோளம். பெயரளவில் நம் நாட்டிற் பரவி பல ஐயத்தை ஆக்கிவிட்டது. சென்ற ஆண்டுப் பொழிலில் நாம் எழுதிய ஐந்திசைகள் எனும் பகுதியை அன்பர்கள் காண வும். இக் காலம் நம் நாட்டில் ஹிந்தோளத்திற்கு சதுச்ருதி தைவதம் கொண்டு பாடும் வழக்கமும் உளது. சுத்த தைவதமே பழைய முறை. அதுவே அழகு பெற்றுள்ளது.

பரத சாத்திரம்.

பாவ வியல்

(முற்றொடர்ச்சி துணர் உரு—மலர் ரு, பக்கம் 150)

௩-வது, பாத லக்ஷணம்[1]

சமபத மண்டிலஞ் சார்ந்திடு குஞ்சிதம்
அமைவுறு மஞ்சித மழகுசேர் வடிம்புடன்
தாடித நாக பந்தச் தன்ெனெடு
சாட கதியுடன் சாற்று நிருத்த
மூர்த்திப் பதமே மொழிகரு டன்னிலை
ஆர்த்த வீரைந்தா மழகிய பதநிலை
குன்றுறை குறுமுனி கூறினர் மாதோ.

பாத வகையைத் தொகுத் துணர்த்துகின்றது.

(இ-ள்) சமபதம், மண்டில பதம், குஞ்சித பதம், அஞ்சித பதம், வடிம்புப் பதம், தாடித பதம், நாகபந்த பதம், சாடகதிப் பதம், நிருத்த மூர்த்தி பதம், கருட நிலைப் பதம் எனப் பத்தாம்[2]—எ-று. (அ௰)

௪-வது. சமபதம்.

சமபத மென்பது தன்பத மிரண்டும்
அமைபெறச்[3] சேர்த்தே யழகுட னிற்றல்

1. அவிநயத் தொழிலிற் பாதங்கள் அமைந்து நிற்கும் இயல்பினை விளக்கும் பகுதி.

2. 'அறுவகை நிலையும் ஐவகைப் பாதமும்' என அடியார்க்கு நல்லார் தொகை கூறுவர். ஐவகைப் பாதமாவன:— சமநிலை, உற்கடிதம், சஞ்சாரம், காஞ்சிதம், குஞ்சிதம், என்பன எனச் சுத்தானந்தப் பிரகாசம் எனும் தமிழ்ப் பரத நூல் கூறும்.

3. அமைபெற—பொருந்த.

கூட்டிய விப்பதக் கொள்கையே தென்னின்
நாட்டிய தேவர் சந்நிதி தன்னினும்
ஆசான் முன்னும் அரசர்கள் முன்னும்
வீசிடு பெரியோர் மெய்த்தவத் தோர்முனும்
வணக்க முடனே வாய்பொத்தி நின்றிடல்
இணக்கமாந் தந்தைதா யின்குரு பதத்தைப்
பூசனை புரிந்திட லென்றே பொருநை
ஆசறு வரை[1] யுறை யருமுனி யுரைத்தனர்.

பாத வகையை விரித் துணர்த்துகின்றது.

(இ-ள்) சமபத மென்பது—தன் இரண்டு பாதங்களையுங் கூட்டிச் செவ்வே நிற்றலாம். இதன் றொழில்—தேவர்கள் ஆசிரியன், அரசர்கள், பெரியோர்கள், தபோதனர் இவர்கள் சந்நிதிகளில் வணக்கமொடு வாய் பொத்தி நிற்றல், மாதா, பிதா, குரு இவர்களைப் பூசித்தல்களில் வரும்—எ-று. (அக)

உ-வது. மண்டிலபதம்[2]

மண்டில மிருகுதிங் கால்களை யெதிர்வரக்
கொண்டு கானடு வெளிபெற வளைத்தல்
சீரணி நிலைப்பதச் செயலறி விக்கின்
நாரணன் கருடன்மே னண்ணுதல் காட்டிடல்
பரியே றுதலும் பகர்புலிப் பாய்ச்சலும்
கரிமிசை யேறிக் கழுத்திற்கால் வைத்தலும்

---

1. ஆசறு வரை—குற்றமற்ற மலை (பொதியம்).

2. மண்டில நிலை யென்பதொன்று சிலப்பதிகாரத்திற் கூறப்படுகின்றது. 'ஐது மண்டிலத்தால்' (அரங்—152) அதற்கும் மண்டில பதத்திற்குமுரிய தொடர்பு ஆராய்தற் குரியது. தேசிக்குரிய கால்களில் மண்டலமும் ஒன்றெனச் சுத்தானந்தப்பிரகாசம் கூறும்.

வச்சிரம் வில்வாள் வாங்கிடி னிப்பதம்
உச்சித மாய்[1] வரு மெனவுரைத் தனரே.

(இ-ள்) மண்டில பத மென்பது—இரண்டு குதிங் கால்களையும் எதிர் முகமாகச் சேர்த்துக் கால்களின் நடு வெளி பெற வளைத்து நிற்றலாம். இதன்றொழில்-விஷ்ணு கருடன்மே லேறுதல், குதிரை யேற்றம், புலிப் பாய்ச் சல், யானை யேற்றம், ஆயுதம் பிடித்தல் இவைகளுக் காம்—எ-று. (அஉ)

ங-வது. குஞ்சித பதம்[2]

குஞ்சித மிருபதங் குறித்துப்பா ரூன்றியே
மிஞ்சிக் குதிங்கால் மேலே தூக்கிடல்
பாரினி லிப்பதப் பாடுகூ றிடினே
ஆரியக் கூத்தர்[3] அடியினை வடமிசை[4]
வீறுடன் வைத்தே மேவி நடந்திடல்
கூறிடு மொன்றதா மிதன்றொழி லென்றே
உள்ளங் கைக்கு ளொலியெழு கடலை
அள்ளி யுண்ட அருமுனி[5] கூறினர்.

(இ-ள்) குஞ்சித பத மென்பது—இரண்டு காற் படங்களின் பெருவிரல் நுனியினைப் பூமியி லூன்றிக் குதிங்கா லிரண்டையும் நோக்கித் தூக்குதலாம். இதன் றொழில்—கழைக் கூத்தர் கயிற்றின் மேல் நடத்தல் ஒன்றே யாம்—எ-று. (அங)

---

1. உச்சிதமாய்—தகுதியுடையதாய்.
2. வளைந்த பாதம்.
3. கழைக் கூத்தாடும் ஓரினத்தார்.
4. கயிற்றின் மேல்.
5. கடல் முழுவதையும் தமது உள்ளங் கையில் திரட்டி அள்ளிக் குடித்த ஆற்றலுடைய அகத்திய முனிவர்.

௪-வது. அஞ்சித பதம்[1]

அஞ்சித மென்ப தணிகுதி யூன்றி
மிஞ்சிய படத்தை மேனேக் குதலாம்
திடமுட னிப்பதச் செயலுரைத் திடினே
நடனப் பரியி னடையுரைத் திடுதல்
பொய்க்கால் கட்டிப் பொருந்த நடத்தல்
நெய்வோர் பாத நிகரினைக் காட்டல்
கள்ள ரடிதனைக் காட்டா தொளித்தல்
விள்ள நெல்லினை விளங்க நெருட்டல்
குயவர் மண்ணைக் கூட்ட மிதித்தல்
நயமுறு மிதற்கென நாட்டினர் குறுமுனி.

(இ-ள்) அஞ்சித பத மென்பது—குதிங்காலை யூன்றிப் படத்தை மேனோக்கி நிற்றலாம். இதன்றொழில்- ஆட்டக் குதிரை நடை, பொய்க்கால் கட்டி யாடல், புடைவை நெய்வோரது தொழில், திருடர் தம் அடியைத் தெரியாதொளித்து நடத்தல், நெற் பதம் பார்ப்போர் நெல்லை நெருடுதல், குயவர் மண் மிதித்தல் முதலியவைகளைக் காட்டலாம்—எ-று. (அச)

ரு-வது. வடிப்புப் பதம்.

வடிப்புப் பதமே வருபுற வடிகளைக்
கடுக்கி[2] யிருபுறஞ் சாய்த்தே யூன்றுதல்
இப்பதம் வருமிடத் தியல்பினை யுரைக்கின்
வைப்பு நடிப்பு மடிப்பெனு மபிநயம்[3]
செய்கான் முரம்பு சேறுக டிருத்தல்
வை[4] தட்டுணைக்கால்[5] வருகமன[6]த்திலும்

---

1. இதன் பெயர்க் காரணம் புலப்படவில்லை.
2. கடுக்கி—மேனோக்க ஒதுக்கி.
3. வைப்பு, நடிப்பு, மடிப்பு என்பன அவிநய வகையாம்.
4. வை—வைக்கோல்.
5. தட்டுணைக்கால்—தட்டுண்ட பாதம். தட்டு—பயிர்த் தட்டை யெனினும் அமையும். 6. கமனம்—செல்லுதல்.

மோகினி நிலைக்கு முனிதப நிலைக்கும்
யோகிகள் யோக நிலையினுக் காமிது
கடுவெயின் மணலி னடையின ராற்றுகை
அரிவையர் கிரீடையி லாமிஃ தென்றே
திருமுனிக் கரசர் செப்பினர் மாதோ.

(இ-ள்) வடிப்புப் பத மென்பது—இரு புற வடிகளையும் இரு பக்கங்களிலுஞ் சாய்த்து நடத்தலாம். இதன்றொழில்—மெதுவா யூன்றல், நடித்தல், மடித்தல் எனும் அபிநயத்துக்கும், வயல், வாய்க்கால், முரம்பு, சேறுகளைத் திருத்தல், வைக்கோல், சோள முதலிய வற்றின் தட்டுகளினடி அடிகளிற் படின் ஒதுங்கி நடத்தல், மோகினி நிலை, தாபதர் நிலை, யோக நிலை காட்டல், சுடு மணலில் நடப்பவர் காலை யாற்றிக் கொள்ளுதல், கிரீடை முதலியவைகளில் வரும்—-எ-று. (அரு)

௬-வது. தாடித பதம்[1]

தாடிதம் வலத்தாட் படத்தி னுனியினைப்
பீடுற மிடத்தாட் படத்தின்பா லூன்றல்
இதன்றொழில் வேய்ங்குழ லெடுத்தூ தற்கிதாம்
இதமுறை குறுமுனி யிசைத்தனர் மாதோ.

(இ-ள்) தாடித பத மென்பது வலது காற் படத்தி னுனியை இடது காற் படத்தின் பக்கத்தி லூன்றலாம். இதன்றொழில்—புல்லாங்குழல் பிடித் தூதுவோர் நிற்றலாம்—எ-று. (அ௬)

எ-வது. நாகபந்த பதம்[2]

நாகபந் தப்பத நாடி யுரைக்கின்
ஏகம தாவிரு காற்புற வடிகளை

---

1. தாடித்தல்—பாடலுக் கேற்ப அடித்து ஊன்றுதல்.
2. பாம்பு ஒன்றோடொன்று சுற்றியது போன்றமைந்தது.

மாறி யிடம்வல மாக நிறுத்தல்
வீறுறு மிப்பதச் செயலினை விரிக்கின்
பொங்கம தா[1] நிலை யோகம் புனைதல்
தங்கிடப் பானு[2] தனைத்தரி சித்தற்
காமென வகத்திய ரறைந்தனர் மாதோ.

(இ-ள்) நாகபந்த பத மென்பது—இரண்டு காலின் படங்களையும் இடம் வலமாக மாறி வைத்தல். இதன் றொழில்—நிலையோகஞ் செய்தல், சூரிய நமஸ்காரஞ் செய்தலாம்—எ-று. (௪எ)

௮-வது. சாடகதிப் பதம்[3]

சாடகதி யெனுஞ் சாரியை[4] யுரைத்திழி
அங்க விடத்தா ளதனைநே ரூன்றிப்
பொங்கிடு வலத்தாள் குஞ்சித மாக்கிடல்
ஆயுதம் பிடித்த வணிநிலை காட்டிடு
மோய நிலை[5]க்கா மெனமொழிந் தனரே.

(இ-ள்) சாடகதிப் பத மென்பது—இடது காலைச் செவ்வையாக வூன்றி, வலது காலைக் குஞ்சிதமா வூன்றல். இதன்றொழில்—ஆயுதம் பிடித்த சேனைகளின் நிலையைக் காட்டலாம்—எ-று. (௪௮)

௯-வது. நிருத்த மூர்த்திப் பதம்[6]

நிருத்த மூர்த்தி நிலைப்பத முரைக்கின்
வருத்து சமபத வலத்தை வளைத்து
அந்தமா நிலத்தி னடைவுட னிருத்தி
முந்திடத் தாளை வளைத்துமுன் போக்கி

1. பொங்கம்—மகிழ்ச்சி. 2. சூரியன்.
3. அசைந்த நடை. 4. சாரியை—வீரனுடைய கதி வகை.
5. மோய நிலை—வீரர் பலர் மொய்த்து நின்ற சேனை நிலை.
6. ஆட வல்லானாகிய கூத்தப்பெருமானது ஆடல் நிலையை யுணர்த்துவதாகலின் இப் பெயர்த்தாயிற்று, நிருத்தமூர்த்தி—நடராசர்.

நேர்முகங் குறுக்கா நிருத்த விதன்றெழில்
பார்புகழ் புலிமுனி[1] பணிமுனி[2] காண
ஆடிய சபாபதி யருட்கோல மாகும்
நாடிய மாறன்[3] நற்றவம் புரிந்தே
ஒருதரங் கூடலி லாடிட லொழித்தே
வாதனை மாறி யாட்டின[4] னென்றே
திருமிகு குறுமுனி செப்பினர் மாதோ.

(இ-ள்) நிருத்த மூர்த்திப் பத மென்பது—சம பதமாக வலது பாதத்தின் படத்தைப் பூமியி லூன்றி, இடது பாதத்தை வளைத்துக் குஞ்சித மாக்கி முன்னாக நீட்டுதலாம். இதன்றெழில்—வியாக்கிர பாதர், பதஞ் சலியார் காணப் பொன்னம்பலத்திலும், பாண்டியன் வேண்டுகோளுக் கிரங்கிக் கான் மாற்றி மதுரையில் வெள்ளியம்பலத்திலும் நடனஞ் செய்த சபாநாயகர் கூத்தே யாம்—எ-று. (அகூ)

ய-வது. கருடநிலைப் பதம்.

அடைவுடன் கருட நிலைப்பத முரைக்கின்
இடது பாதாக்கிர[5] மியல்புட னூன்றி
மூட்டு முழந்தாள் முன்னுற விருத்திக்
காட்டும் வலப்புறக் கான்மூட்டு மடக்கி
முன்போக்கிச் சமபத மாக விருத்தல்
அன்புட னிப்பதத் தடைவை யுரைக்கில்
அதிசயக் கருடனும் அநுமனும் அரிவையக்
கதிபெற வெடுக்குங் காட்சியைக் காட்டல்
தவழ்ந்துநற் கண்ணன் தயிர்பால் வெண்ணெயைக்

---

1. வியாக்கிர பாதர். 2. பதஞ்சலி முனிவர்.

3. இராசசேகர பாண்டியன்.

4. இறைவன் மதுரையில் வெள்ளியம்பலத்துள் கால்மாறி யாடிய வரலாற்றைத் திருவிளையாடல் கூடற் காண்டம் கான் மாறி யாடின படலத்துட் கண்டு தெளிக.

5. பாதாக்கிரம்—காற் பெருவிரலின் நுனி.

கவர்ந்திடு செயலைக் காட்டுதற் கிதுவாம்
கார்நிற ராவணன் கைலை வரையினைச்
சீர்பெற வெடுக்குஞ் செயலுக் கிதுவே
அத்திர[1] சத்திர[2] மணிபெறத் தொடுத்தல்
நத்தி[3] யம்மானை நயம்பெற வாடிடல்
நெற்பயிர் முதலிய நாற்று பிடுங்கலில்
இப்பதம் வருமென இசைத்தனர் குறுமுனி.

(இ-ள்) கருட நிலைப்பதமாவது—இடது காலின் படத்தி னுனியையும், இடது முழங்காலையு மூன்றி, வலது பாதத்தின் முழங்காலை வளைத்து முன் போக்கிப் பதமூன்றி நிற்றலாம். இதன்றொழில்—கருடனும், அநுமனும் விஷ்ணுவைத் தாங்கும்போதும், கிருஷ்ணன் தவழ்ந்து தயிர், பால், வெண்ணெயை வாரி யுண்ட போதும், இராவணன் கைலாய வரையை யெடுக்க முயலும்போதும், அஸ்திர சத்திரந் தொடுக்கும் போதும், அம்மானை யாடும்போதும், நெற் பயிர் முதலிய நாற்றுகளைப் பிடுங்கும்போதும் இப் பத முபயோகமாம். எ-று. (கூ0)

பத லக்ஷண முற்றிற்று.

---

1. அத்திரம்—கையிலிருந்து எய்தற்குரிய அம்பு முதலிய படைக்கலம். மந்திரத்தைத் துணையாகக்கொண்டு எய்யப் படுவது எனினும் ஆம்.

2. சத்திரம்—கையிற் பற்றிப் பொருதற்குரிய வாள் முதலிய படைக்கலம்.

3. நத்தி—விரும்பி.

ச-வது. நேத்திர லக்ஷணம்[1]

சகத்தினில் ரூபந் தனையறி பொருளோ
மிகுத்திடு நேத்திர மென்றே விளம்புவர்
காந்தை பயாநகங் கருணை மூடாம்பரம்
வாய்ந்த வற்புதம் வரும்வீரக் கண்ணுடன்
நகைக்கண் ணுடனே நாட்டிய வேழாம்.

நேத்திர லக்ஷணத்தைத் தொகுத் துணர்த்துகின்றது.

(இ-ள்) காந்தைக் கண், பயாநகக் கண், கருணைக் கண், மூடாம்பரக் கண், அற்புதக் கண், வீரக் கண், நகைக் கண் என ஏழாம்—எ-று.

க-வது. காந்தைக் கண்[2]

காந்தைக் கண்ணைக் கருதி னிமைகளைப்
பேர்ந்து மலரப் பெருக்கி விழித்தல்
இக்கண் பார்வைக் கிடமே தென்னின்
மிக்க நாட்டிய விதத்தி லிதுவரும்
அஞ்சனங் கண்ணடி யதிசயம் பார்த்தல்
வஞ்சியர் முகக்குறி வகையுடன் காட்டல்
சித்திர வுருவின் சிங்கா ரங்களும்
உத்தம வானுடு வுயர்மதி யுதயன்
பலபொரு டம்மைப் பார்ப்பதில் வருமெனக்
கலைதரு குறுமுனி கட்டுரைத் தனரே.

(இ-ள்) காந்தைக்கண் ணென்பது—இரண்டிமைகளையும் விரித்து விழித்தலாம். இதன் தொழில்-அஞ்சனம், கண்ணடி, அதிசயம் பார்த்தல், பெண்கள் விருப்பான முகக்குறி காட்டல், சித்திர வுருவச் சிறப்பினையும், நக்ஷத்திரங்கள், சந்திரன், சூரியன் பல பொருள்களையும் பார்த்தல் முதலியவாம்.

---

1. கண்களின் இயல்புரைக்கும் பகுதி.
2. காந்தை—பெண். மகளிர்க்குச் சிறப்புரிமையுடையதாதலின் இப் பெயர் பெற்றது.

உ-வது. பயாநகக் கண்[1]

பயாநக மேல்கீழ் பக்கங்களில் விழி
உயாவிட மூடி யுற்று விழித்தல்
இந்நய னத்தொழில் ஏதோ வென்னின்
நன்னய வபிநய நடிப்பினி லிதுவரும்
போர்த்த கந்த மூக்கிற் பொருத்துதல்
ஏத்திய விநயம்[2] இறுமாப்பு மோசம்
லாஞ்சனே[3] மோக நாடிய சலிப்பு
வாஞ்சை மோகினிகண் ணுடியைப் பார்த்தல்
வன்பொருட் பார்வை மருளா சியமாம்[4]
நன்முனி யிறைமுனி நவின்றனர் மாமே.

(இ-ள்) பயாநகக்கண் ணென்பது—கண்களை மூடி மூடி மேல் கீழ் பக்கங்களை விழித்துப் பார்த்தல். இதன் றொழில்—வாசனையை மோத்தல், விநயம், கருவம், வஞ்சனை, அடையாளம், மோகித்தல், துக்கம், ஆசையைக் காட்டல், மோகினி யுருவங், கண்ணுடி பார்த்தல், பல பொருள்களை மதிப்பிடல், மருட்சி, ஆசிய முதலியவைகளில் வரும்—எ-று.

ங-வது. கருணைக் கண்[5]

கருணைக் கண்ணே கடைநடு வெளிபெற
இருநிமை[6] சேர்த்தே யிடுக்கிப் பார்த்தல்
சீரிய வியலிசை செய்தொழி றனில்வரும்
சூரிய னொளி[7]யினைச் சூட்சியாப் பார்த்தல்

---

1. அச்சத்தைத் தோற்றுவிக்கும் கண்வகை என்பது இத்தொடரின் பொருளாகும்.
2. விநயம்—பணிவு.
3. இலாஞ்சனை—அடையாளம்.
4. மருள்—மயக்கம். ஆசியம்—சிரிப்பு.
5. அருள் நோக்கு. 6. நிமை—இமை.
7. சூரியன் ஒளித்தல்—கிரகணம்.

விழிவயிற் கூசிடின் மெல்ல விழித்தல்
உழன்றே யொழுங்கை யொருகணுற் பார்த்தல்
கலியாணப் பெண்கள் கவிழ்ந்து விழித்திடல்
துலையாக் காற்றிற் றூளெழி னிதுவரும்
அசதி விழிப்பினு மாசைக்கு மிதுவாம்
இசையுறு நாசி முனையினைப் பார்த்தல்
கனற்புகை மருந்திசை களாசஞ் சாந்தியாம்
வனப்புறு தமிழ்வரை மன்னுரைத் தனரே.

(இ-ள்) கருணைக்கண் ணென்பது—இமைகளால் முற்பாகக் கண்களை மூடி, நடுக்கண், கடைக் கண்களைத் திறந்து இடுக்கிப் பார்த்தலாம். இதன்றொழில்—சூரிய கிரணத்தைப் பார்த்தல், வெயிலாற் கண் கூசின் மெது வாய்ப் பார்த்தல், ஒரு கண்ணை மூடி யொழுங்கு பார்த்தல்,[1] கலியாணப் பெண்கள் கவிழ்ந்து பார்த்தல், நடக்கும்போது காற்றினால் தூசி யெழும்பின் கூசிப் பார்த்து நடத்தல், ஒரு பொருளை மறந்து போயின் யோசித்துப் பார்த்தல், ஆசையைக் காட்டல், மூக்கின் முனையைப் பார்த்தல், நெருப்பின் புகை, மருந்தின் மணம் பார்த்தல், களாச நிலை[2], சாந்த குணங் காட்டல் முதலியவாம்—எ-று.

சு-வது. மூடாம்பரக் கண்[3]

மூடாம் பரக்கண் மொழியுங் காலை
சோடா[4] விருவிமை சுருக்கிப் பார்த்தல்

---

1. ஒழுங்கு பார்த்தல்—தச்சர் முதலியோர் கோணின்றி நேராயிருத்தலை நோக்குதல்.

2. 'களாச நிலை—காஞ்சுகி பிரம்பாற் சுட்டிக் காட்டல்' என்பது பழைய குறிப்பு. களாசம்—பிரம்பு. பிரம்பாற் சுட்டிக் காட்டும் நிலை களாச நிலை யெனப்பட்டது.

3. மூடு + அம்பரம் = மூடாம்பரம் என வந்தது. அரைக்கண் பார்வையான அவிநயக்கண் வகை.

4. சோடா—இரட்டையாக. சோடு—இரட்டை.

இந்தக் கண்டொழி லியம்புங் காலை
சிந்தைநோய் மயக்கந் தியானத்தி லிதுவரும்
நற்றுயி றன்னின்மூ டாம்பர நாடும்
சிற்பர னடிதொழுந் திருமுனி கூறினர்.

(இ-ள்) மூடாம்பரக்கண் ணென்பது—இரண்டிமைகளையும் நெருக்கிப் பார்த்தலாம். இதன் றொழில்—துக்கம், மயக்கம், தியானம், நித்திரைகளில் இவ் விழி வருதலாம்—எ-று.

ரு-வது. அற்புதக் கண்[1]

இருவிழி தன்னைச் சுற்றுத லாகும்
பெருமித மாமிவ் விழித்தொழில் பேசின்
அருமையா மற்புதப் பொருளறிந் திடலெனத்
திருமிகு தென்றல் வரைமுனி செப்பினர்.

(இ-ள்) அற்புதக் கண் ணென்பது—விழிகளைச் சுழற்றிப் பார்த்தலாம். இதன் றொழில்—அற்புதமான பொருளொன்றை யோசித்துப் பார்த்தலாம்—எ-று.

சா-வது. வீரக் கண்[2]

வீரக்கண் ணென்ப துருட்டி விழித்தலாம்
நேரும் விழிதா னிகழ்த்திடு பொருளோ
வீரர் நிலையினை விளக்குத லென்ப.

(இ-ள்) வீரக் கண் ணென்பது—கண்களை யுருட்டி விழித்தலாம். இதன் றொழில்—வீரர் நிலைமை கூறலாம் எ-று.

எ-வது. நகைக் கண்[3]

நகைக்கண் டானே நானிலத் தவரும்
நகைத்திட விகார மாக நாட்டுதல்
என்றனர் தென்ற லிருந்தமிழ் முனியே.

(இ-ள்) நகைக் கண் ணென்பது—நாநா விகார ரூபமாகக் காட்டல். இதன் றொழில்—யாவரு நகைக்கச் செய்தலாம்—எ-று.

நேத்திர லக்ஷண முற்றிற்று.

---

1. வியப்பினால் மருண்டு நோக்கும் பார்வை.
2. வீரக் குறிப்பினைப் புலப்படுத்தும் பார்வை.
3. காண்போர்க்கு நகை தோற்றுவிக்கும் பார்வை.

ஐயுணர்வும் மெய்யுணர்வும்.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

(முற்றொடர்ச்சி : துணர் உடு, மலர் எ, பக்கம் 220)

ஐம் புலன்களோடு கூடிய மக்களுயிர்க்குச் சிறப்பாயுள்ள மன அறிவு, பிறவாமை யாகிய செவ்விய பொருளின் உண்மையினைத் தெளிய வுணரின் அதுவே பிறப் பறுத்துச் சாவினை வகைகளின் சார்பு கெட வீட்டினை நல்கச் செய்யும் மெய் யுணர்வாம். இதனையே தெய்வ நலஞ் சான்ற மெய் யுணர்வினரான திருவள்ளுவர்,

'சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்.'

என்னும் வெண்குறளின்கண் குறிப்பிட்டுள்ளர். இக் குறளுக்கு நுண்ணறிவு சான்ற உரையாசிரிய ராய பரிமேலழகர், ஒருவன் எல்லாப் பொருள்களுக்கும் சார்பாகிய அச் செம் பொருளை அறிந்து இரு வகைப் பற்று மற ஒழுக வல்லானாயின், முன் அவனைச் சார்தற் குரியவையாய் நின்ற துன்பங்கள் அவ் வுணர்வையும் ஒழுக்கத்தையும் அழித்துப் பின் சார மாட்டாவாம் எனக், கருதுதற் கினிய அரிய பொருளுரைத்தார். மற்றும் இதற்கு உணர்வாட்சி யுடைய மணக் குடவர், 'தன்னைச் சார்வனவற்றை யறிந்து அவையிற்றின் சார்பு கெட ஒழுகுவானாயின், அவ் வொழுக்கத்தினை யழித்துச் சார்தலைச் செய்யா ; சாரக் கடவனவாய துன்பங்கள்.' என மிக நுண்ணியதோர் உரை வகுத்தார். இக் குறட் பாவின் கருத்தை விளக்க எழுந்த களிற்றுப்படி,

'சார்புணர்ந்து சார்பு கெடவொழுகி னென்றமையாற்
சார்புணர்தல் தானே தியானமுமாஞ்—சார்பு
கெடவொழுகி னல்ல சமாதியுமாங் கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று'

என்பதாகும். இதற்குத் துறவறச் செல்வராய சிவப்பிரகாசர், 'தெய்வப் புலமைத் திருவள்ளுவத் தேவரும் 'சார் புணர்ந்து

சார்பு கெட வொழுகின்' என்றமையால் தனக் கனுதியே தாரகமாய் நிற்கிற திருவடி ஞானத்தை அது சுண்ணுக அறிந்து அதனுடனே இரண்டறக் கூடி நிற்கில் மீண்டும் ஒரு பிறப்பு உண்டாகாதென்று அருளிச் செய்த பிரமாணப் படியே தனக்குத் தரிசனமான ஞானத்தைக் கூடி அசைவற நிற்கில் அதுவே சிவத் தியானமாம். அந்த நிலையில் தியானிக்கிருே மென்கிற பாவனை குலையில் அப் பொழுதே சுக சொருபமான சிவனைக் கூடி நன்ருன சமாதி பரனுகா நிற்பன்; இப்படிக் கூடின் சிவயோகிகளுக்குப் பின்பு பிறப்பை யுண்டாக்குகிற ஆகாமிய கன்மம் உண்டாகாது' என உரை கண்டார். இதனுன் திருவருளை யுணர்ந்து திருவருள் நீங்கும் படிக்கு ஒழுகினு லென்று திருவள்ளுவர் உரைத்த பான்மையி னுலே, திருவருளை யுணருகிறதே மனதாரக் காதலால் கசிந் துருகித் திருவருளிலே தோய்ந்து தொடர்ந்து நிற்றலுமா மென்பதூஉம், திருவருள் நீங்கும்படிக்கு ஒழுகினல் அதுவே, அதுவே யாதலாகிய ஒன்ருற்றுப்படுத்தலுமா மென்பதூஉம் அறியப்படலாயிற்று. 'சார்தரு நோய்' என்பதற்குப் பரிமே லழகர் 'முன் வினை' என்றும், சிவப்பிரகாசர் 'செய் வினை' என்றும் பொருள் கண்டதூஉம், சார்பு இரண்டிற்கும் முறையே 'செம் பொருள்' எனவும், 'வினைச் சார்பு' எனவும் பரிமேலழகர் பொருள் விளக்கம் செய்ததூஉம், மணக்குடவர் சார்பு இரண்டற்கும் 'வினைச் சார்பு' என்றே பொருள் உரைத்ததும் நுணுகி யாய்ந்து கருத்துப் பொருளின் வன்மை, மென்மை தேறுதல் வேண்டும். மணக்குடவ ருரை யும், பரிமேலழகருரையும் பெரிதும் கருத் தொருங்கி நின்ரு லும், பரிமேலழகர், சார் புணர்தல், சார்பு கெட ஒழுகல், என்பதற்கு முறையே ஞானத்தையும், ஒன்றிப்பையும் கருத்தாகக் கொண்டவராக, சிவப்பிரகாசர், அவற்ருன் முறையே ஒன்றிப்பின் முடி பொருள் நிலையாய மனம் தொடர்ந்து நிற்றல் நிலையினையும், அதுவே யாதலாய ஒன் ருற்றுப்படுத்தல் நிலையினையும் செம்மைப் பொருளாகக் கருதினுர்.

தெய்வத் திருவள்ளுவர் கருதியது இம் மூவருள் ஒருவர் கருத்தோ அல்லது மூவர் கருத்தினும் வேறனதோ என்பது துணியப்படாது போயினும், மூவரும் தம் தம் கருத்தையே உரை யாற்றல் மேவ அக் குறளில் கண்டு இன்புற்றதினன், அவ் வுரைகளின் நுணுக்க வேறுபாடுகள் பயன்படும் வண்ணம், உளங் கொளற் பாலனவே. உரை யாசிரியர்கள் கொண்ட கருத்துக்களை இணக்கி ஆயுங்கால் மெய்ம்மை தேற்றும் நுட்பம் புலனும். பிறவி வினை வழி வருதலான் இறவியொடு பிறவியலும் ஆற்றினை நுணுகித் துணிந்து காணாத வாழ்க்கை மண்ணின் கலம் போலச் சாந்துணையும் துன்பமே. வினையின் விளைவு ஆகாமிய மாதலின் விருப்பு வெறுப்பே செய்யப்படும் வினை வருவதற்கு வழியாகும். துன்பந் தரும் வினைகள் சார்தற் கிடமாய வாழ்வில், வேண்டுதல் வேண்டாமை யிலானகிய இறைவனை ஞான யோக தவ வொழுக்க வகையான் சிந்தித்துச் சார்ந்தாரை முன் வினை, மூள் வினை, செய் வினை என்ற வினை வகைகள் சாரா. எனவே விருப்பும் வெறுப்பும், வாழ்வும் தாழ்வும், இன்பமும் துன்பமும், இகழும் புகழும், இறையோடு கலந்தோர்க்கு ஒன்று போல் அருட்காட்சி தர, அன்னர் யாண்டும் இடும்பை யிலர். எனவே, தன்னந் தனியாய் முற் கூறிய உரைகளின் கண் வற்புறுத்தப்பட்ட நிலைகளின் உறுதிப் பொருளைக் காணும் நோக்க முடையார். இறுதியில் ஆர்வ மீதூர இன்ப மெய்துதல் இயல்பு. உயிருக்கு, இவை கைகூடின் மனித வாழ்வைச் சார்ந்து துன்புறுத்தும் காமம், வெகுளி, மயக்கம் மாய்ந் தொழிந்து ஊன் பிறவிக்குத் திரும்பாத வீட்டு நெறி புலனகும்.

சற்றுச் சிந்தித் துணரின், உயிருக்கு உண்மை அறிவினை ஊட்டித் தெய்வத் தன்மையாய குறிக்கோளை அணுகச் செய்து உயிரின் உரிமையினை நிலைநாட்டற்கு உலக வாழ்வு ஒரு வகையில் உதவி புரிகின்றது. புரைபடும் இன்பங்களினல் அலைக்கப்படும் மனித வாழ்வில் உயிரைப் பற்றிய ஞானமும்,

தவமும், யோகமும், துறவும் தம்தம் இடங்களைப் பெற்று உள்ளத் தூய்மையினையும் புல னடக்கத்தினையும் மக்கள் செய்கைகளிலே விளங்கத் தோற்றுவிக்கின்றன. நம்மையும் புற உலகத்தையும் உணரும் நமது உணர்வே விரிந்தும் ஆழ்ந்தும் உயர்ந்தும், அறிவு நெறியிலும், உயிர் விளக்கத்திலும், இன்புறு ஒளி நெறியிலும் விழுமிய நிலை எய்தி ஒரு படிப்பட்ட மெய் யுணர்வாக மிளிராநிற்கும். அது போது பொறி யுணர்வானும் மன உணர்வானும் கொண்டு உலகையும் இறைவனையும் உணரும் உயிர் பேராற்றலுடைய தென்பதும். அத் தனி ஆற்றலை இடைவிடாது சூழ்ந்திருப்பது அறிவென்பதும், உண்மை அறிவே பேரின்பம் பயக்கு மென்பதும் மனித தத்துவத்தை வழிபடப் பயின்றால் உள்ளம் இறை மயமாய் விளங்கிப் பின் உலகமும் இறை மயமாகத் தோன்றுகின்ற தென்பதும், தன்னை அறிந்தால் இறைவனை அறிதலாகு மென்பதும், தானே தானாகத் தன் னுணர்வுடன் வாழும் நிலையே மாசறு மெய்ப் பொருட் காட்சி யாகு மென்பதும் மனிதன் உணர்கிறான். உள்ள மிசை குடி கொண்ட பரம் பொருள் யாவரிடத்து மிருப்பதினான், உள்ளத்தின் செல்வ மாகிய ஊக்க மொன்றானே யாவரும் ஐயுணர்வடக்கி மெய் யுணர்வு நிலையினை அடைய இயலும். அயரா முயற்சியால் அவனி தலத்தே வாரா வுறுதிகளுளவோ? முன்னேற்றம் எதிரிடைகளில்லாது வாராததினான், மனத்தில் எழும் எண்ணங்களை மெய் யறிவால் அடக்கி, அதன் அடிக் கண் ணுறையும் சார்புகளையும் தேய்த்து, உள்ளத்தைச் சலியாத ஊக்க மிகுதியான் அலையற்ற தெளிந்த நிலையில் வைப்பின், மெய்ப் பொருளின் ஒளி தோன்றும். உவமை கடந்த இவ் விறை யொளி முன், உலகத் துயிர்களுக்குத் துணையான கதிரவனது ஒளியும் மதியினது ஒளியும் குன்றி மழுங்கித் தாழு மெனின், சிந்தை மேய இறை பெருக்கும் அப் பேரொளியின் மாண்பு அளவிட லரியது.

வையக வாழ்வியல் துன்பப் புயலால் அலையுறுதபோது, அதனில் களிவந்த சிந்தையோடு ஈடுபட்டிருக்கும் ஒருவன்,

பொறி புலனுக்கு அடங்காப் பொருள் ஒன்றிலே தோய்ந்து நிற்றலை எண்ணுகிறானுமில்லை. உணர்ச்சி வகையானும் ஊட்டினானும் அதனைச் சிந்திக்கிறானுமில்லை. துன்பத்தால் அலமந்து வெம்புகின்றபோழ்து அவனுக்கு மனத்தோடும் புறவுலகோடும் போராடும் நிலைபுலனாகின்றது. தன் சிற்றறிவும் குறு ஆற்றலும் வாழ்க்கைக்குப் போதிய அளவு உறுதுணை பயவா வென்பது துன்பம் துய்ப்பவனுக்கு விளங்கவே, மெய்ப்பொருளின்பால் நாட்டம் அவன்மாட்டு முதற்கண் தோன்றுகிறது. இறைவன் கழலருமை வெவ்வினையிற் காணுங்காலை, அகத்தே இறையுணர்வும், புறத்தே அவ்வுணர்வோடு கலந்த உலகியற் கடமையும் அவன் உடையவனாகி வினைக்களமாகிய உலகவாழ்வின் முடிபு மெய்ஞ்ஞானமென்பது உணர்ந்து மனம்படு மெய்யொழுக்க நிலையில் தலைப்படுகிறான். அதுகாலை மனம் வாக்குக் காயம் என்ற முக்கரணங்களாலும் இறைத்தொண்டு புரியும் உணர்வு அவனுக்கு உதிக்க, உண்மை நெறி யறம் அவனுக்குப் புலனாகின்றது. இறை வழிபாடு மன மொழி மெய்களான் செய்யற்பால தென்பதை வள்ளுவரது குறள் வெண்பாக்களில் நலம்பெற வன்மையுடன் இசைக்கப்பட்டிருத்தல் கவனிக்கற்பாற்று. மனத்தால் இறைவனை நினைந்து வழிபடலை,

> மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
> நிலமிசை நீடுவாழ் வார்
> வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்
> கியாண்டும் இடும்பை யில

என்றும்,

வாக்கினாற் பாராட்டி வழிபடலை,

> இருள்சே ரிருவினையும் சேரா விறைவன்
> பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

என்றும், மெய்யால் வணக்கம் செய்து வழிபடலை,

> பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
> நெறிநின்றார் நீடுவாழ் வார்.

என்றும் வள்ளுவப் பெரியார் செவ்விதாய்த் தேறி வழங்கிய

முறை மக்க ளுள்ளத்தை விழுமிய தாக்கி மக்கட்குப் பேரின்ப வாழ் வளித்து நலன் பயவாநிற்கும்.

இவ்வாறு வழிபாட்டிடை வலிவு பெற்று விழுமிய உள்ளப்பழக்கத்தில் பண்பட்ட ஒருவன், பின்னர், இறைவனை அடைதற்குரிய வீறுபெறு நான்கு நிலைகள் வேண்டத் தக்கன வென்று உணர்ந்து, அரும்பு, மலர், காய், கனி போல் சாதனமும் சாத்தியமுமாக ஒன்றற்கொன்று விடாது பற்றி நிற்கும் சரியை, கிரியை, யோக, ஞான நெறி நின்று, ஐயுணர் வடக்கிய மெய்யுணர்வில் தோய்ந்து தெளிந்தால் இறுதியில் ஞானத்தால் வீடைய இயலுமெனத் துணிகிறான். இடையறாத மெய்யுணர்வானும் மெய்யன்பானும் இறைபால் காதலாகியும், கசிந்துருகியும், அவனதருளைப் பெற நாடிப் பசித்திருப்ப, 'உள்ளங் கவர் கள்வ னாகிய இறைவன், அவ்வாறு உருகி மெய்யுணர்வு கடைப்பிடிக்க' லுறுவார்க்கு உய்வதற் கேற்ற உயிர்ப்பினை உள்ளிருந்தே காண்பிக்கிறான். அதைச் சாருமளவு உள்ளஞ் சிலிர்க்கவும், உயிர் கிளர்ச்சியுறவும், அவன் ஆற்றல் விழுப்பம் மேவி ஓங்குகிறது; அன்பு பெருகுகிறது; அறிவு வளர்கிறது. இறைவன் உயிருக்கு உயிராயும் அறிவிற்கு அறிவாயும் ஒற்றித்து நின்றாலும், இறைவன் உயிர்களின் வல்வினைகளைக் கழிக்கின்ற கால தத்துவமு மாகி, அவ்வினைகள் மீண்டும் பற்றாமல் தடுத்து, உயிர்களைக் காந்து நின்றே ஆட்கொள்ளும் அருளுடையவனாதல் பற்றி, அவன் அறிவால் அறிதற்கும் அரிய நிலையில் இல்லொன்றெனவே உள்ளானென்பது ஈண்டுக் கருத்திருத்தற் பாலது. எனவே, மெய்யுணர்தல் வாயிலாக எய்தலாகும் இன்ப நிலை, வினையொழிவில் எய்தத் தக்க தாதலின், வினை கெடுதற்குரிய வழி, உணர்வான விழியை நாடி அருளின் தாகமெடுத்திருப்பதுவே. ஈடும் எடுப்பும் இலாத மெய்யுணர்ச்சியில் தலைப்பட்ட விழுமியோர், மனத்தோடு கூடிய ஐம்புல அறிவையுடையாராயினும், மெய்ந்நீர்மை மேனின்றவ ராதலான், அன்னாரது அவாவற்ற அமைதியான மெய்யொழுக்க நிலை, உலகுக்கே உயிர் வழங்கித் தன்னைச் சார்ந்தாரையும் துன்பமிலா இனிமை யுறுத்தும் செல்வப் பேரின்பத்தே னுடும் திருவளர் முருகு மலரின் தன்மைத்தாம்.

திருக்குறள்

பொன்னுரைப் பகுதிகள்.

உரைகாரர்: கொக்குவில் திரு. வ. பொன்னையா, B. A. (Hons.), Ph. D.

(முற்றொடர்ச்சி: துணர் உடு, மலர் சு, பக்கம் 183.)

வாய்மை.

தவஞ் செய்வானுவான் தன் மாணுக்கர்க்குத் தன் நெஞ்சறிந்த தொன்றனை யான் அறியேன் என்று பொய் கூறுமலேனும் அன்றி அறிந்தவாறு சொல்லியேனும் நிற்க, அவன் மாட்டுக் காணப்படும் இப் பண்பு அம் மாணுக்கரை நிலையுதலுள்ள மெய்யாகிய வீடுபேற்றின்கண் உய்த்தற் கேதுவாகுமெனின் வாய்மையாகும். அவன் தானறிந்த தைத் தானறிந்திலன் என்று கூறி நின்றுனுயின் அஃது கனவாகு மென்றும், வஞ்சிக்கும் நோக்கின்றிப் பொய்யாது நின்றுனுயின் அஃது ஒரு வகை வாய்மையாகு மென்றும். இனித் தானறிந்ததைச் சொல் பற்றிப் புலப்படுத்தி நிற்க, அச் சொற்கள் அவன் மாணுக்கரை நிலையுதலுள்ள மெய்க் கண் உய்த்தற்கு நேரே ஏதுவாகுமெனின் வேறொருவகை வாய்மை யாகு மென்றும் பரம்பரையான் ஏது வாகு மெனின், இன்னு மொருவகை வாய்மை யாகுமென்றும், ஏதுவாகா வெனின் பொய்ம்மை யாகுமென்று மறிக.

முன் தவஞ்செய்வான் மாட்டு மனமொழி மெய்களுள் மனம்பற்றிச் சிறப்பு வகையான் நிகழுங் கூடா வொழுக்க விசேடமாகிய கள்ளுதலைக் கடியு முபாயங் கூறுமுகத்தானே கள்ளாமை யென்னுஞ் சாதனத்தைத் தந்தவர், ஈண்டு மொழிபற்றிச் சிறப்புவகையான் எழுங் கூடாவொழுக்க

விசேடமாகிய பொய்ம்மையை நீக்கும் வழிதருவாராய் வாய்மை யென்னு மதிகாரத்தை எடுத்துக் கொண்டாராத லின் இது கள்ளாமையின் பின் வைக்கப்பட்டது.

1. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

(இ-ள்.) தன் நெஞ்சு அறிவது பொய்யற்க—தவஞ் செய்வானுவான் சாத்தியஞ் தலைப்படுதற் பொருட்டுத் தன் நெஞ்சு அறிவதொன்றனைப் பொய்யாதொழிக; பொய்த்த பின் தன் நெஞ்சே தன்னைச் சுடும்—பிராரத்த வினை நுகர்ச் சிக் கண் பரிசயத்தானே யெழுந் தற்போத முனைப்பொடு மரீஇய வஞ்சனைபற்றிப் பொய்த்தானுயின், அதனையறிந்த தன் நெஞ்சே தன்னை வருத்தும்.

தன்னெஞ்சு ஆறும் வேற்றுமைத் தொகை. அறிவது வினையாலணையும் பெயர். ஈண்டு வகர விடை நிலை காலங் காட்டாது தன்மை உணர்த்திற்று. பொய்யற்க என்பது பொய்த்தல் என்னும் வினையடியாகப் பிறந்த வியங்கோள் எதிர்மறை. பொய்த்தபின் என்பது இறந்த காலங் கண் ணிய பின்னீற்று வினையெச்சம். ஏகாரம் தேற்றம். சுடும் என்பது வருத்தும் என்னும் பொருளது.

'கள்ளாமை யென்னும் மேலையதிகாரத்து ஈற்றுக்கண் தந்த குறளால் வஞ்சனையானது தவஞ்செய்வானது களவுச் சிந்தையொடு நீக்கமின்றி உடனுய் நிற்குமென்று கூறினீர். இனி அவ் வஞ்சனையைப்பற்றி யெழுங் கூடா வொழுக்க விசேடமாகிய பொய்ம்மையானது எவ்வாறு அவனுக்குச் சாத்தியங் தலைப்படுதலைத் தடுக்குமென்றும், அது தலைப்படு தல் விழையின் அவன் எவ்வகைச் சாதனஞ் செய்யவேண் மென்றுங் கூறுக' என்றற்கு அவ் வஞ்சனையைப் பற்றி யெழும் பொய்யாமை யானது அவன் நெஞ்சை வருத்து முகத்தானே சாத்தியங் தலைப்படுதலைத் தடுக்கு மென்றும், அதுபற்றி அது தலைப்படுதல் விழையின் அவன் வஞ்சனை

யின்றிய நோக்கொடு பொருந்தி நின்று பொய்யாமை யென்னும் ஒருவகை வாய்மையைக் கடைப் பிடிக்க வென்றும் இக் குறளாற் கூறுகின்றார்.

தவஞ்செய்வானுவான் சிவோகம் பாவனை யென்னுஞ் சாதனத்தைச் செய்யச் செய்ய அவனுடைய கரணங்க ளெல்லாம் பசு கரணங்களாதல் ஒழிந்து சிவ கரணங்களாக மாறு நிற்கும். அவை மாற அவனுக்கென ஒரு செய்தியு மில்லை யாகும். அஃது அவ்வாறாக அவன் தன் மனத்தால் அறிவதும் வாயாற் சொல்வதும் மெய்யாற் செய்வது மாகிய இவை யனைத்தும் உடலின் உயிர் போல் அவனு டன் அபேதமாய் நிற்கும் இறைவன் செய்தி களாகும். ஒருகால் அடியவன் ஒருவன் தனக்கு நேர்ந்த இடுக்கணை விலக்குதற்குத் துணை வேண்டி நின்றா னாயின், அதனை அறிந்த கருணைப் பிழம்பாகிய இறைவன் அத் தவத்தவ னது மெய்யை அதிட்டித்து நிற்ப, அத் தவத்தவன் தான் இன்ன காரணத்தான் ஆண்டுச் செல்கின்றா னென் பதை அறிந்தேனும் அறியாமலேனும் நின்று அவ் வடிய வன் பால் ஏகித் துணை வேண்டி நிற்பன். இனி, வேறொரு கால் அடியவன் வேறொருவன் சில தொண்டு செய்தற் கண் இன்னது செயின், அஃது நன்றாகுமா தீதாகுமா வென்று ஆராய்ந்தும் ஒரு முடிபுக்கும் வாராது திகைப் புற்று நின்று பின் அத் தவத்தவன் மாட்டேகி ஒரு வாய்ச் சொல் வேண்டி நின்றானாயின் அதனை யறிந்த இறைவன் அத் தவத்தவன் மொழியை அதிட்டித்து நின்று அவன் அறியும் வகையேனும் அறியா வகை யெனும் அவ்வடிய வன் விழையும் வாய்ச் சொல்லை வழங்குவன். அஃதன்றி இறைவன் அத் தவத்தவனது மனத்தை அதிட்டித்து நின்று அவனுக்கு அவ் வடியவன் விரும்பும் பொருளை அறிவுறுத்தினும் அறிவுறுப்பன். அங்ஙன மறிந்த தொன் றனைப் பிராரத்தவினை நுகர்ச்சிக் கண் ஒரோ வொருகாற் பரிசயத்தானே எழுந் தற்போத முனைப்பொடு மரீஇய வஞ்சனை காரணமாக அத் தவத்தவன் யான் அறியேன்

என்று கூறிப் பொய்த் தானுயின், அவனது வாயானது சிவகரணமாகாது வேறுபட்டதை யுணர்ந்த அவன் நெஞ்ச மானது அவனை நலியா நிற்கு மென்று கூறிய வாருயிற்று.

இனித் தவஞ் செய்வானுவான் பிறரை வஞ்சிக்கும் நோக்கின்றித் தானறிந்ததைத் தனது வாய் சிவகரண மாகிக் கூறும்வரை தானுகக் கூருது பொய்யாமை மேற் கொண்டு நின்ருனுயின், அஃது அவனையும் கேட்டாரையும் நிலையுதலுள்ள மெய்ம்மைக்கண் செலுத்துதற் கேதுவா மாகலான் வாய்மை யாகு மென்றுஞ் கூறினுராயிற்று

இக் குறளுக்குப் பரிமேலழகர் 'ஒருவன் தன் னெஞ் சறிவ தொன்றனைப் பிற ரறிந்தில ரென்று பொய்யா தொழிக; பொய்த்தானுயின் அதனை யறிந்த தன் னெஞ்சே அப் பாவத்திற்குக் கரியாய் நின்று, தன்னை அதன் பயனு கிய துன்பத்தை யெய்துவிக்கும் என்னும் உரையைத் தந்து, உரை விளக்கத்தில் நெஞ்சு கரியாதற்குக் 'கண்டவ ரில்லென' என்னும் நெய்தற் கலியை எடுத்துக் காட்டி 'பொய் மறையாமையின் அது கூறலாகா தென்பது இதனுற் கூறப்பட்டது' என்ருர்.

யான் அருளின்றிப் பொய் கூறியமையானே இவன் இன்னவாறு கெட்டானே யென்று உளம் வருந்துதலே தவஞ் செய்வான் மாட்டுத் தோன்றி அவன் தவத்தைக் கொல்லு மொழிய, யான் பொய் கூறியதை இவ ரறிந்தாரே யென்பது அவன் மாட்டுத் தோன்றினும் ஒருவாற்ருற் பற்றற்று நின்ருனுதல் பற்றி அவன் நெஞ்சை வருத்தா தாகையான் அழகியாருரை நல்லுரை யன் றென்க.

இப் பாட்டு என்னுதலிற்ருே வெனின்; தவஞ்செய்வா னுவான் தன் சாத்தியந் தலைப் படுதல் விழையின் வஞ்சனை யின்றிய நோக்கொடு பொருந்தி நின்று, தானறிந்த தொன் றனையும் பொய்யாமையாகிய வாய்மையைக் கடைப் பிடிக்க எ—று.

2. யாமெய்யாக் கண்டவற் றுள்ளில்லை யெனைத் தொன்றும்
வாய்மையி னல்ல பிற.

(இ-ள்) யாம் மெய்யாக் கண்டவற்றுள்—யாம் நிலை பேறுடைய பயனை அளிப்பனவாகக் கண்டனவற்றுள்; எனைத் தொன்றும் வாய்மையின் நல்ல பிற இல்லை—தவஞ் செய்வாற்கு யாதொரு தன்மையானும் வாய்மையினுங்கு நல்லனவாகிய பிற அறங்கள் இல்லை, ஆகலான் அவன் வாய்மை கடைப் பிடிக்க.

மெய் என்பது நிலை பேறுடைய பயனாகிய வீடுபேறு. ஈண்டு அது காரிய வாகு பெயராய்த் தவருது நிலை பேறுடைய பயனளிப்பன வாகிய அறங்களைக் குறித்து நின்றது. ஆகவென்பது தொகுத்தல் விகாரம் பெற்று ஆவென நின்றது எனைத் தொன்றும் என்புழி ஒன்று என்பதன் பின் ஆனுருபு விரித்துப் பொருளுரைக்க. ஈண்டு எனைத்து என்னும் பண்புகொள் வினைப்பெயர் ஒன்று என்னும் எண்ணுகு பெயர்க்கு அடையாய் நின்றது. யாதொரு தன்மையாலும் என்றது காலத்தானும் இடத்தானும் பிற வாற்ருனும் என்றவாறு. உம்மை முற்றும்மை. ஐந்தனுருபு உறழ் பொருவுப் பொருட்டு, உவமப் பொருவுப் பொருட்டெனினுமாம். நல்ல என்பது குறிப்பு வினைப் பெயரெச்சமுற்று, குறிப்பு வினைப் பெயரெச்ச மெனினுமாம். பிற என்பது பலவின்பாற் பெயர்.

'தன் னெஞ்சறிந்த தொன்றைப் பொய்த்தால் தன் னெஞ்சே தன்னை வருத்து மென்றீர், அதனைப் பொய்யாமையும் பிற வகை வாய்மைகளும் ஒருவன் தவத்தை முடிபு போக்கு மென்பதன்கண் ஐய மின்று. கூடா வொழுக்கந் தவிர்தல், கள்ளாமை முதலியனவும் அவ்வாறே செய்யும். ஆயின், இவற்றினுங்கு வாய்மை எத்துணை நன்ருகும்' என்ருற்கு விடை இக் குறளாற் கூறுகின்ருர்.

நிலையிலதாகிய உலக வாழ்க்கையின் பொய்ம்மையை யுணர்ந்து நிலையுளதாகிய வீடு பேறடைதல் விரும்பி அருளுடைமை, புலாலுண்ணாமை யென்னுஞ் சாதனங்களைச் செய்து, அச் சாதனங்களான் ஏறிய புண்ணியப் பேற்றினால் ஞானாசிரியன் கிடைத்தல் பெற்று, அவர் கொடுத்த தவமாகிய சிவோகம் பாவனை யென்னுஞ் சாதனத்தைச் செய்ய, அதன் முதிர்ச்சியில் அவனுடைய கரணங்கள் அனைத்தும் பசு கரணங்களாதல் ஒழிந்து சிவகரணங் களாக மாறும். இந்நிலையில் அவனுக்கென ஒரு செய்தியு மில்லாமையானே, அவன் மன மொழிகள் பற்றி யெழுஞ் செயல்கள் அனைத்தும் இறைவன் செய்திகளாகும். ஆயினும், அன்னானுக்கு உடம்புள்ளளவும் நிலை பெற்று நிற்கும் பிராரத்தவினை நுகர்ச்சிக்கண் தொன்று தொட்டு வரும் பயிற்சி வயத்தானே முனைத்தெழுந் தற்போதங் காரணமாக ஒரோவொருகால் அந்நிலை குலைதல் நேரின், கூடாவொழுக்கந் தவிர்தல், கள்ளாமை, வாய்மை, கொல்லாமை முதலிய நன்றான சாதனங்கள் துணை கொண்டு தவஞ் செய்தானாயின், அவனுக்குச் சாத்தியந் தலைப்படும். தவஞ் செய்வானுக்கு இச்சாதனங்களுள் வாய்மையானது தற்பொருட்டுச் சாத்தியந் தலைப்படுதலொடு பிறர் பொருட்டுத் தவந் தலைப்படுதற்குத் துணை செய்யு மாகலானும், ஏனையவை தற்பொருட்டே பயன் படு மாகலானும், அவன் மாட்டுக் காணப்படுந் துணைச் சாதனங்களுள் வாய்மையினூங்கு நன்றான பிறவறமில்லை யென்று கூற ஐந்தனுருபு உறழ் பொருவுப் பொருட்டாதல் காண்க.

(தொடரும்.)